O.S. No.49/2021

**25.09.2024**

**வா.சா. 2**

**திரு வீரமணி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி அறிவழகன் எந்த தேதியில் கேட்டார் என்று எனக்கு தெரியாது ஆனால் கொடுத்தது தெரியும். குடும்ப செலவிற்கும் வீடு கட்டுவதற்காகவும் தொகை கேட்டார். 23.07.2018 ல் பிரதிவாதி, வாதியிடமிருந்து கடனாக தொகை பெற்றார். கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார். கடனுறுதி சீட்டை அறிவழகன்தான் பூர்த்தி செய்து கையொப்பம் செய்தார். கடனுறுதி சீட்டில் அறிவழகன் கையொப்பம் செய்து தகப்பனார் பெயர், முகவரி ஆகியவற்றை பூர்த்தி செய்து எழுதியது உட்பட என என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். கடனுறுதி சீட்டில் முதல் கையொப்பமாக பட்டாணி சாட்சி கையொப்பம் செய்தார், 2-வது சாட்சி கையொப்பமாக நான் செய்தேன். வாதி மதியழகன் என்னுடைய சகோதரர் என்றால் ஆம். வாதி கிராமத்தில் பதிவு செய்யப்படாத ஏலச் சீட்டு

நடத்தி வந்தார் என்றால் அதுபோல் இல்லை. வாதியால் நடத்தப்பட்ட ஏலச் சீட்டில் பிரதிவாதியும் ஒரு சந்தாதாரராக இருந்து பலனடைந்து வந்தார் என்றால் தவறு. 2016 ல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் உள்ள ஏலச் சீட்டு தொடர்பானது முடிவுக்கு வந்து விட்டது என்றால் தவறு. 2016 ல் ஏலச்சீட்டு தொடர்பாக கொடுக்கப்பட்ட கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் தவறு. என் முன்னிலையில் வாதி, பிரதிவாதியும் கடனாக தொகை கொடுக்கவில்லை எனவும் பிரதிவாதி எந்த கடனுறுதி சீட்டும் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை எனவும் வாதி என்னுடைய சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

P SELVA MUTHU KUMARI

Digitally signed by P SELVA MUTHU KUMARI
Date: 2024.09.25 15:31:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.49/2021

**25.09.2024**

**வா.சா. 3**

**திரு பட்டாணி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி அறிவழகன் எந்த தேதியில் கேட்டார் என்று எனக்கு தெரியும். 23.07.2018 அன்று பணம் கேட்டார். வீடு கட்டுவதற்காக தொகை கேட்டார். கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார். கடனுறுதி சீட்டை அறிவழகன்தான் பூர்த்தி செய்து கையொப்பம் செய்தார். கடனுறுதி சீட்டில் அறிவழகன் கையொப்பம் செய்து தகப்பனார் பெயர், முகவரி ஆகியவற்றை பூர்த்தி செய்து எழுதியது உட்பட என என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். கடனுறுதி சீட்டில் முதல் கையொப்பமாக நான் சாட்சி கையொப்பம் செய்தார், 2-வது சாட்சி கையொப்பமாக வீரமணி செய்தார். வாதி மதியழகன் என்னுடைய பங்காளி என்றால் ஆம். வாதி கிராமத்தில் பதிவு செய்யப்படாத ஏலச் சீட்டு நடத்தி வந்தார் என்றால் அதுபோல் இல்லை. வாதியால் நடத்தப்பட்ட ஏலச் சீட்டில் பிரதிவாதியும் ஒரு சந்தாதாரராக இருந்து பலனடைந்து வந்தார் என்றால் தவறு. 2016 ல்

வாதிக்கும் பிரதிவாதிக்கும் உள்ள ஏலச் சீட்டு தொடர்பானது முடிவுக்கு வந்து விட்டது என்றால் தவறு. 2016 ல் ஏலச்சீட்டு தொடர்பாக கொடுக்கப்பட்ட கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் தவறு. என் முன்னிலையில் வாதி, பிரதிவாதியும் கடனாக தொகை கொடுக்கவில்லை எனவும் பிரதிவாதி எந்த கடனுறுதி சீட்டும் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை எனவும் வாதி என்னுடைய பங்காளி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

P SELVA MUTHU KUMARI

Digitally signed by P SELVA MUTHU KUMARI
Date: 2024.09.25 15:31:17 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.